පළාත් රාජ්‍ය සේවා කොමිෂන් සභාව, නැගෙනහිර පළාත, ත්‍රිකුණාමලය
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம், திருகோணமலை
PROVINCIAL PUBLIC SERVICE COMMISSION, EASTERN PROVINCE, TRINCOMALEE

මගේ අංකය / உமது இல / Your No

මගේ අංකය / எனது இல / My No  EP/07/03/02/20-15/2026

09.01.2026

பிரதம செயலாளர்
செயலாளர்கள் / பிரதிப் பிரதம செயலாளர்கள்
மாகாண பணிப்பாளர்கள் / ஆணையாளர்கள்
மாநகர ஆணையாளர்கள் / வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
நகரசபை செயலாளர்கள் / பிரதேசசபை செயலாளர்கள்
கிழக்கு மாகாணம்.

**கிழக்கு மாகாண அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் IIIஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2026**

கிழக்கு மாகாண அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் IIIஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை 2026 ஏப்ரல் மாதம் நடைபெறும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக தங்களது அமைச்சில் / திணைக்களத்தில் / அலுவலகத்தில் கடமையாற்றும் மேற்படி சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவித்து, விண்ணப்பங்களை இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் **www.doenets.lk** இணையதளத்தில் **“Our Services”** என்பதன் கீழ் உள்ள **“Online Applications - Recruitment Exams/EB Exams”** ஊடாக மாத்திரம் சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்காக 2026 ஜனவரி 12 மு.ப. 9.00 மணி தொடக்கம் 2026 பெப்ரவரி 09 பி.ப. 9.00 மணி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். நிகழ்நிலையில் (online) விண்ணப்பித்த அச்சுப் பிரதியை தரவிறக்கம் செய்து, விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தி, நிறுவனத் தலைவரின் சான்றுடன் **“செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம், கன்னியா வீதி, வரோதயநகர், திருகோணமலை”** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

முதன்முறையாக விண்ணப்பிக்கும் போது பரீட்சைக்கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. அதன் பின்னரான தடவைகளில் ஒரு பாடத்திற்கான பரீட்சைக்கட்டணம் ரூபா 250 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் விதம் குறித்த அறிவுறுத்தல்கள் பரீட்சை அறிவித்தலிலும், இணையத்தளத்தில் பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

**இது தொடர்பான மேலதிக பரீட்சை அறிவித்தலை கீழே குறிப்பிட்ட கிழக்கு மாகாண சபை இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும். பரீட்சை அறிவித்தலைத் தெளிவாக வாசித்து விளங்கிக்கொண்ட பின்னர், விண்ணப்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறியத்தருகின்றேன்**

**www.ep.gov.lk → Exams → E.B Exam**

**ஜே. லியாகத் அலி,**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்.

**தொலை பேசி / දුරකතන / Telephone**
அலுவலகம் / කාර්යාලය / Office : 026 2220092
தொலைநகரி / ෆැක්ස් / Fax : 026 2222174
மின்அஞ்சல் / විද්‍යුත් තැපෑල /E-mail : ppscep@gmail.com

கன்னியா வீதி, வரோதயநகர், திருகோணமலை
කන්නියා පාර, වරෝදයනගර්, ත්‍රිකුණාමලය
Kanniya Road, Varothayanagar, Trincomalee